பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

25 09 2024 **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைக்கு இரண்டாவது கட்டமாக 26 தொகுதிகளில் இன்று நடைபெற்ற தேர்தலில் 55 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.
2. நாட்டில் இரண்டு பெரிய துறைமுகங்கள் உருவாக்கப்பட்டு வருவதாக கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.
3. வேலைவாய்ப்பின்மை வெகுவாக குறைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.
4. தமிழகத்தில் 50 லட்சம் இளையோருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிட தொழில் வழிகாட்டி நிறுவனத்துக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.
5. இருபது வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை தகுதிச்சுற்று கால்பந்து போட்டியில் இந்தியா 4-1 என்ற கோல் கணக்கில் மங்கோலியாவை வென்றது.

இனி விரிவான செய்திகள் ----

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைக்கு இரண்டாவது கட்டமாக 26 தொகுதிகளில் இன்று நடைபெற்ற தேர்தலில் 55 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக முதல் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாக்குப்பதிவு அமைதியாக நடந்து முடிந்ததாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

ஆறு மாவட்டங்களுக்கு உட்பட்ட இந்த தொகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த 3 ஆயிரத்து 502 வாக்குச்சாவடிகளில் பலத்த பாதுகாப்புக்கு இடையே வாக்குப்பதிவு நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரரிவிக்கிறார்.

அதிகபட்சமாக **Shri Mata Vaishno Devi** சட்டப்பேரவை தொகுதியில் 75 புள்ளி இரண்டு ஒன்பது சதவீத வாக்குகளும், குறைந்த பட்சமாக **Zadibal** தொகுதியில் 28 புள்ளி மூன்று ஆறு சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

இந்த இரண்டாவது கட்ட தேர்தலில் 239 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

மூன்றாவது மற்றும் இறுதிக்கட்ட தேர்தல் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 8-ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

<<<<<<>>>>>

முதலீட்டிற்கு உகந்த நாடாக இந்தியா திகழ்கிறது என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் சர்வதேச வர்த்தக கண்காட்சியை இன்று கிரேட்டர் நொய்டாவில் தொடங்கிவைத்து அவர் பேசினார்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதாக அவர் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு, செமி கண்டெக்டர் மற்றும் மொபைல் போன் துறைகளில் இந்தியா முன்னணியில் திகழ்வதாகவும் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நாட்டில் இரண்டு பெரிய துறைமுகங்கள் உருவாக்கப்பட்டு வருவதாக கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

இன்று புதில்லியில் தமது துறையின் சாதனைகள் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், **Great** நிக்கோபார் தீவுகளில் உள்ள **Galathea** மற்றும் மகாராஷ்ட்ராவின் **Vadhavan** –ல் இந்த துறைமுகங்கள் ஏற்படுத்தப்படுவதாக தெரிவித்தார்.

நாடு முழுவதும் தற்போது 14 பெரிய துறைமுகங்கள் செயல்பாட்டில் உள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

துறைமுகங்களில் சரக்குகளை கையாளும் திறன் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் திரு சர்பானந்த சோனாவால் கூறினார்.

<<<<<<>>>>>

வக்ஃப் சட்டத்திருத்த மசோதா தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற கூட்டுக்குழு, ஒரு கோடிக்கும் மேற்பட்ட பரிந்துரைகளை பெற்றுள்ளதாக மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் கடந்த 100 நாட்கள் சாதனைகள் குறித்து செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

வக்ஃப் சட்டத்திருத்த மசோதா தொடர்பான ஆலோசனைகள் பெரிய அளவில் நடத்தப்பட்டிருப்பது ஜனநாயகத்திற்கு நன்மை பயக்கும் என்று அவர் கூறினார்.

சிறுபான்மையினர் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும் அமைச்சர் பட்டியலிட்டார்.

ஹஜ் யாத்ரிகர்களின் வசதிக்கென கைபேசி செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டதையும் திரு கிரண் ரிஜிஜு சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>

அன்னையின் பெயரில் ஒரு மரம் நடும் இயக்கத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவுடன் இணைந்து, மரக்கன்றை நட்டுவைத்த பின்னர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் அவர் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அன்னையின் பெயரில் நடும் மரக்கன்றுகள் எதிர்கால சந்ததியினருக்கு வளம் சேர்க்கும் என்றும் திரு எல். முருகன் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

நாட்டில் வேலைவாய்ப்பின்மை வெகுவாக குறைந்துள்ளதாக அதுதொடர்பான ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022–ஆம் ஆண்டில் ஐந்து புள்ளி ஒரு சதவீதமாக இருந்த வேலைவாய்ப்பின்மை சதவீதம் கடந்த நிதியாண்டில் 3 புள்ளி இரண்டு சதவீதமாக குறைந்துள்ளதாக அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹரியானா, தமிழகம், சட்டிஸ்கர் மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வேலைவாய்ப்பின்மை வெகுவாக குறைந்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த காலக்கட்டத்தில் ஹரியானாவின் வேலைவாய்ப்பின்மை சதவீதம் ஒன்பது புள்ளி இரண்டு சதவீதத்தில் இருந்து, 3 புள்ளி நான்கு சதவீதமாக குறைந்துள்ளதாக அது தெரிவித்துள்ளது.

இதற்கு அடுத்தப்படியாக தமிழகத்தில் வேலைவாய்ப்பின்மை வெகுவாக குறைந்துள்ளது என்றும் அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

ஐ நா பாதுகாப்புக்குழுவில் இந்தியாவிற்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து வழங்க சிலி ஆதரவு தெரிவித்துள்ளது.

ஐ நா பாதுகாப்புச்சபையில் உரையாற்றிய சிலி அதிபர் திரு **Gabriel Boric Font,** ஐ நா பாதுகாப்புக்குழுவில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு இந்த சீர்திருத்தங்கள் இருக்க வேண்டும் என்றும் சிலி அதிபர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

ஜார்கண்ட் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக திரு ராமச்சந்திர ராவ் இன்று பதவியேற்றுக்கொண்டார்.

ராஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அம்மாநில ஆளுநர் திரு சந்தோஷ்குமார் கங்குவார், அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன் மற்றும் மாநில அமைச்சர்கள், நீதிபதிகள் மற்றும் உயரதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் 50 லட்சம் இளையோருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிட தொழில் வழிகாட்டி நிறுவனத்துக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இந்த நிறுவனத்தின் பணியாளர்களை இன்று சந்தித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

மாநிலத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் 10 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டதாகவும், இதில் 60 சதவீத பணிகளை இவர்கள் நிறைவேற்றியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

எஞ்சிய பணிகளையும் விரைவில் நிறைவேற்றுமாறு அறிவுறுத்தியுள்ளதாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

ஊட்டச்சத்து மாதத்தையொட்டி, தமிழகத்தில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒருபகுதியாக மதுரையில் உள்ள தனியார் கல்லூரி ஒன்றில் சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - ரகுராஜா — 54 செகண்ட்ஸ்)*

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி தங்களுக்கு பெரிதும் பயனளிக்கும் வகையில் இருந்ததாக இதில் பங்கேற்ற மாணவிகள் தெரிவித்தனர்.

*(வாய்ஸ் பைட் - மாணவிகள் - 42 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

விளையாட்டுச் செய்திகள்

20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை தகுதிச்சுற்று கால்பந்து போட்டியில் இந்தியா 4-1 என்ற கோல் கணக்கில் மங்கோலியாவை வென்றது.

**Laos**-ல் நடைபெற்ற இப்போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் இந்தியா 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

இரண்டாவது பாதியில் இந்தியா அடுத்தடுத்து மூன்று கோல்களை அடித்தது.

----------------

உலக ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Kamal Chawla** பட்டம் வென்றார்.
மங்கோலியாவில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதியாட்டத்தில் அவர், 6-2 என்ற புள்ளிக்கணக்கில் பாகிஸ்தானின் **Asjad Iqbal** –ஐ வென்றார்.

-----------------

**Macau** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த், காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.
ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-14, 21-15 என்ற செட் கணக்கில், இஸ்ரேலின் **Daniil Dubovenko** வென்றார்.
மற்றொரு ஆட்டத்தில் **Ayush Shetty** 21-13, 21-5 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Alap Mishra** –வை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதிபெற்றார்.

-------------------

பாங்காக்கில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - ஜப்பானின் **Toshihide Matsui** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

----------

செஸ் ஒலிம்பியாட் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற இந்திய அணியினருடன் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுதில்லியில் கலந்துரையாடினார்.

<<<<<<END>>>>>